வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவண குமார்

தேதி 14.1.2026 நேரம் மாலை 6.10 மணி

தலைப்புச் செய்திகள்

புதுடெல்லியில், காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை, பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை, முறைப்படி தொடக்கி வைக்கிறார்.

சுயசார்பு இந்தியா இலக்கை எட்டுவதில், விவசாயிகளின் முயற்சிகளுக்கு முக்கிய இடம் இருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

செயற்கை நுண்ணறிவின் தாக்கங்கள் குறித்த உச்சி மாநாட்டை இந்தியா, அடுத்த மாதம் நடத்தும் என, மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் அறிவித்துள்ளார்.

பொங்கல் திருநாளை ஒட்டி, புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மோடி-காமன்வெல்த்

காமன்வெல்த் நாடுகளின் தலைவர்களுக்கு இடையே, புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ள 28-ஆவது மாநாட்டை, பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை, முறைப்படி தொடக்கி வைக்கிறார். மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா, இவ்விழாவிற்கு தலைமை ஏற்கிறார். மாநாட்டில், 42 காமன்வெல்த் நாடுகளில் இருந்து, நாடாளுமன்ற தலைவர்கள் மற்றும் சபாநாயகர்கள் பங்கேற்றுள்ளனர். ஜனநாயக அமைப்புகளை வலுவாகப் பராமரிப்பது உட்பட, நாடாளுமன்றத் தலைவர்கள் சந்திக்கும் சமகால பிரச்சனைகள் குறித்து, விரிவான விவாதங்கள் இம்மாநாட்டில் இடம் பெறுகின்றன. மக்களிடையே, நாடாளுமன்றத்தின் செயல்பாடுகள் குறித்த புரிதலை அதிகரிப்பது குறித்தும், நாடாளுமன்ற செயல்பாடுகளில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு குறித்தும், அமர்வுகளுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

*மோடி-பொங்கல் (15)*

வலுவான நாடாக இந்தியாவை கட்டியமைப்பதில், முக்கிய கூட்டாளிகளாக திகழ்வது விவசாயிகள்தான் என்றும், சுயசார்பு இந்தியா இலக்கை எட்டுவதில் விவசாயிகளின் முயற்சிகளுக்கு முக்கிய இடம் இருப்பதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். புதுடெல்லியில், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் இல்லத்தில் இன்று நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் பிரதமர் இவ்வாறு கூறினார். விவசாயிகளின் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் இதற்கென அயராத முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாகவும் அவர் தெரிவித்தார். தமிழ் பண்பாட்டிற்கு, இந்தியாவின் பொதுப் பாரம்பரியத்தில் மட்டுமின்றி, மனிதகுலத்தின் ஒட்டு மொத்த பாரம்பரியத்திலும், முக்கிய இடம் இருப்பதாக பிரதமர் கூறினார். தமிழ் பாரம்பரியத்தில் வாழ்வின் அஸ்திவாரமாக விவசாயிகள் மதிக்கப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டி பாராட்டினார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் உரையில் இருந்து ஒரு பகுதி.............

*பிரதான்*

செயற்கை நுண்ணறித் தொழில் நுட்பத்தின் தாக்கங்கள் குறித்த முக்கியமான உச்சி மாநாட்டை பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில், இந்தியா, அடுத்த மாதம் நடத்தும் என, மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் அறிவித்துள்ளார். இன்று சென்னை ஐஐடி உயர்கல்வி நிறுவனத்தில், பொங்கல் கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட அவர், உச்சி மாநாடு தொடர்பான இந்நிறுவனத்தின் முன்னேற்றங்களையும், மறுஆய்வு செய்தார். பின்னர் அமைச்சர் நடத்திய செய்தியாளர் கூட்டம் குறித்து ஒரு தொகுப்பு ...........

<u>உலக அளவில், கல்வி, சுகாதாரம், உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில், செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தின் பயன்பாடு மிகவேகமாக அதிகரித்து வருவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்தார். இத்தகைய நிலையில், செயற்கை நுண்ணறிவு தொடர்பான புதுமைப் படைப்புகளில் இந்தியாவின் பங்கை வலுப்படுத்தும் வகையில், வரவிருக்கும் உச்சி மாநாடு அமையும் என்று அவர் கூறினார்.</u>

நடப்பு 2026-ஆம் ஆண்டில் நாட்டின் கல்வி கட்டமைப்புடன் செயற்கை நுண்ணறிவை ஒருங்கிணைக்க முக்கிய கவனம் செலுத்தப்படும் என்று, அமைச்சர் தெரிவித்தார். பள்ளிக் கல்வி முதல், ஆராய்ச்சிக் கல்வி வரை தாய்மொழியை பயிற்று மொழியாக மாற்ற முன்னுரிமை அளிக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

*பிஜேபி-ராகுல்*

பிரதமர் திரு நரேந்திர மோடி, உலக அளவிலான ஒவ்வொரு அரங்கிலும் தமிழின் சிறப்பை தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும், கடந்த 11 ஆண்டுகளில் தமிழ் மொழி, கலாச்சாரம் மற்றும் மரபுகளை, வேறெந்தத் தலைவரும் இந்த அளவு சிறப்பித்தது இல்லை என்றும் பிஜேபி கூறி உள்ளது. அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் திரு குருபிரகாஷ் பாஸ்வான், இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். மூத்த காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்தி அண்மையில் தமிழகம் வந்த போது, தமிழ் மக்களின் குரலை பிரதமர் திரு நரேந்தி மோடி ஒடுக்குவதாகப் பேசியதை அவர் வன்மையாக மறுத்தார்.

*முர்மு*

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, நாளை முதல் பஞ்சாப் மாநிலத்திற்கு, 2 நாள் பயணம் மேற்கொள்கிறார். நாளை அமிர்தசரஸ் குருநானக் தேவ் பல்கலைக்கழகத்தில் 50-ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் தலைமை விருந்தினராக அவர் கலந்து கொள்கிறார். நாளை மறுநாள் ஜலந்தரில் டாக்டர் அம்பேத்கார் என்ஐடி உயர்கல்வி நிறுவனத்தின் 21-ஆவது பட்டமளிப்பு விழாவிலும் அவர் கலந்து கொண்டு, மாணவர்களுக்கு பட்டங்கள் மற்றும் பதக்கங்களை வழங்குகிறார். குடியரசு தலைவரின் வருகையை ஒட்டி, அமிர்தசரஸ் மற்றும் ஜலந்தர் பகுதியில் டிரோன்கள் மற்றும் விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

*குறியீடு*

மக்கள் நலன், இயற்கை ஆதாரங்களின் பாதுகாப்பு, மற்றும் உலக அமைதிக்கான பங்களிப்பில் பொறுப்பாக செயல்படும் நாடுகள் குறித்த, உலக அறிவுஜீவிகள் அமைப்பின் RNI குறியீடு, வரும் 19-ஆம் தேதி புதுடெல்லியில், முன்னாள் குடியரசு தலைவர் திரு ராம் நாத் கோவிந்த் முன்னிலையில் வெளியிடப்பட உள்ளது. டெல்லி ஜவஹர்லால் நேரு

பல்கலைக் கழகம், மும்பை ஐஐஎம் உயர்கல்வி நிறுவனம், மற்றும், டாக்டர் அம்பேத்கார் சர்வதேச மையத்தின் ஒத்துழைப்புடன், பொறுப்பான நாடுகளின் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப் பட்டுள்ளது.

*ரங்கசாமி-வாழ்த்து*

பொங்கல் திருநாளை ஒட்டி, புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். தமிழர் பண்பாட்டுடன் ஒருங்கிணைந்த பண்டிகையான பொங்கல் திருநாள், தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்க்கை முறைகளையும், வேளாண்மை உடனான நெருங்கிய உறவுகளையும் பிரதிபலிப்பதாக, அவர் தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார். இயற்கைக்கும் விவசாயிகளுக்கும் நன்றி செலுத்தும், மகிழ்ச்சிகரமான அறுவடைத் திருநாளாம் பொங்கல் பண்டிகை, அனைத்து இல்லங்களிலும், மகிழ்ச்சி, அமைதி மற்றும் வளம் பொங்கச் செய்யட்டும் என்றும், பொங்கலின் இனிமையால், அனைவரின் வாழ்விலும், நல்ல தொடக்கங்களும் வெற்றிகளும் பெருகட்டும் என்றும் முதலமைச்சர் வாழ்த்தி உள்ளார்.

*புதுச்சேரி-போகி*

புதுச்சேரியில் பொங்கல் பண்டிகைக்கு முதல் நாளான இன்று போகி பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது. மக்கள் பழைய பொருட்களை கழித்தும், புதிய பொருட்களை வீடுகளில் கொண்டு வந்து சேர்த்தும் மகிழ்ச்சியாக போகி கொண்டாடினர். இம்முறை டயர், பிளாஸ்டிக், தெர்மகோல் போன்றவற்றை எரிப்பதை பெரும்பாலும் தவிர்த்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் போகி கொண்டாடப்பட்டது. குறிப்பாக கிராமப் புறங்களில் பண்டிகை களை கட்டி இருந்தது. காரைக்கால் மற்றும் ஏனாமிலும் போகி பண்டிகை வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

*புதுச்சேரி-பொங்கல்*

புதுச்சேரி லோக்நிவாசில் பொங்கல் திருநாள் இன்று பாரம்பரிய முறையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் குடும்பத்துடன் இதில் கலந்து கொண்டு, பொங்கல் வைத்துக் கொண்டாடினார். முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மற்றும் இதர பிரமுகர்களும், லோக்நிவாஸ்

பொங்கல் விழாவில் கலந்து கொண்டனர். தமிழ் பண்பாடு மற்றும் மரபுகளை வெளிப்படுத்தும் வகையில் கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் பாரம்பரிய விளையாட்டுகளும், விழாவில் இடம் பெற்றன.

*சவ்கான்*

மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் இன்று புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில், **விலங்கின பாதுகாப்பு விருதுகளை** வழங்கி சிறப்பித்தார். விழாவில் பேசுகையில் அமைச்சர் வெளியட்ட கருத்துக்கள் குறித்து ஒரு தொகுப்பு............

நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கையை அதிகரித்து ஊரகப் பொருளாதாரத்தை வலுப்படுத்த, **விலங்கினப் பாதுகாப்பு** மிக அவசியம் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் கூறினார். உள்நாட்டு கால்நடை இனங்களை பாதுகாப்பதால், விவசாயிகள் மற்றும் **மேய்ச்சல் சமூகத்தினரின்** வாழ்வாதாரம் மேம்படவும், உற்பத்தித் திறன் மற்றும் **பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ற நெகிழ்வுத் தன்மை** அதிகரிக்கவும் ஏதுவாகும் என்று அவர் தெரிவித்தார். நாட்டில் **விலங்கினப் பாதுகாப்புத் தேவை** அதிகம் உள்ள 266 கால்நடை இனங்கள் அடையாளம் காணப்பட்டு, இதில் **16 கால்நடை இனங்கள்** பதிவு செய்யப்பட்டு உள்ளதாக, அமைச்சர் மேலும் கூறினார்.

*ராஜ்நாத்*

பாதுகாப்பு படைகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற **முதுபெரும் வீரர்கள்** தினமான இன்று புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கலந்து கொண்டு முதுபெரும் வீரர்களை கவுரவித்தார். நாட்டைக் கட்டி எழுப்பும் பணிகளிலும், ஒழுக்கம், துணிச்சல் மற்றும் தலைமைப் பண்புடன் சமுதாயத்திற்கு வழிகாட்டுவதிலும், **முன்னாள் பாதுகாப்பு படையினர்** எப்போதும் முன்னணியில் நிற்பதாக, அவர் குறிப்பிட்டார். 40 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட **அமைதி காக்கும் படையினரின்** வீரம், துணிச்சல் மற்றும் தியாகங்களை, எல்லா நிலைகளிலும் **அங்கீகரித்துப் போற்ற**, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, நடவடிக்கை எடுத்து வருவதாக, அமைச்சர் மேலும் கூறினார்.

கப்பல்

மரப் பலகைகளை ஒன்றிணைத்து பாரம்பரிய முறையில் கட்டப்பட்ட இந்திய கடற்படையின் **INSV-கவுண்டின்யா** பாய்மரக் கப்பல், தொன்மையான கடல் வழியில் **ஆயிரத்து 400 கிலோமீட்டர்** பயணித்து, இன்று, மஸ்கட்டில் உள்ள **சுல்தான் கபூஸ்** துறைமுகத்தை சென்றடைந்துள்ளது. கடந்த ஆண்டு மே மாதம் இந்திய கடற்படையில் முறைப்படி சேர்த்துக் கொள்ளப்பட்ட இக்கப்பல், தனது முதலாவது பயணத்தை, கடந்த டிசம்பர் 29-ஆம் தேதி, போர்பந்தரில் இருந்து தொடக்கியது. இந்தியாவின் **பன்னெடுங்காலக்** கடல்சார் பாரம்பரியத்தில், இந்தியப் பெருங்கடல் **மார்க்கங்களுக்கும்**, பருவக் காற்றின் உதவியுடன் பயணிக்கும் பாய்மரக் கப்பல்களுக்கும், முக்கிய இடம் இருப்பது குறிப்பிடத் தக்கது.

வானிலை

வடகிழக்கு பருவமழை அடுத்த 2 நாட்களில் விலக வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கிழக்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்றும் நாளையும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில். லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், நாளை மறுநாள் முதல், 20-ஆம் தேதி வரை, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், வறண்ட வானிலையே நிலவக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும், வானிலைஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிக பட்சமாக நெல்லை மாவட்டம் **ஊத்து** பகுதியில், 9 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

கிரிக்கெட்

ஆடவர் கிரிக்கெட்டில், இந்தியா-நியுசிலாந்து அணிகளுக்கு இடையே இன்று ராஜ்கோட்டில் நடைபெறும், 2-ஆவது 1 நாள் சர்வதேச போட்டியில், இந்திய அணியால் நிர்ணயிக்கப்பட்ட, ----------- ரன் என்னும் வெற்றி இலக்கை நோக்கி, 2-ஆவதாக ஆடும் நியுசிலாந்து அணி, சற்று முன் வரை, ----------- ஓவர்களில், --------- விக்கெட் இழப்பிற்கு, -------- ரன் எடுத்து இருந்தது. 3 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில், கடந்த ஞாயிற்றுக்கிழமை வதோதராவில் நடைபெற்ற முதலாவது போட்டியில்

இந்தியா, 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, 1-க்கு பூஜ்யம் என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. 3-ஆவது மற்றும் இறுதி சர்வதேச போட்டி, வரும் 18-ஆம் தேதி இந்தூரில் நடைபெறும்.

ஆரவல்லி

ஆரவல்லி மலைத்தொடரின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க, அரசு உறுதிப்பாடு கொண்டுள்ளதாக, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்திரயாதவ், மீண்டும் வலியுறுத்தி உள்ளார். இதுகுறித்து இன்று புதுடெல்லியில் நடைபெற்ற தேசிய மாநாட்டில், அவர் பேசுகையில், ஆரவல்லி மலைத் தொடர் நெடுகிலும், 97 கிலோமீட்டர் நீளத்தை சுற்றியுள்ள நிலங்கள், காப்பு வனப் பகுதியாக அறிவிக்கப்பட்டு, ஆக்கிரமிப்பும் சட்டவிரோத சுரங்கப் பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளதாக கூறினார். ஆரவல்லி பசுமைச் சுவர் திட்டத்தின் கீழ் 6.45 லட்சம் ஹெக்டேர் பாழ் நிலங்கள் இனம் காணப்பட்டு, இதில் 2 லட்சத்து 70 ஆயிரம் ஹெக்டேர் நிலங்களில், வள மீட்புப் பணிகள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/14.1.2026/Script.

------------------------